**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.9/2020** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W. 6** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| **Name :** | கலைவாணன் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **18.11.2025**

**3, 5, 12 எதிரிகள் ஆஜரில்லை. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் மேலப்புலியூரில் குடியிருக்கிறேன். கூலி வேலைசெய்கிறேன். எனக்கு குடிபழக்கம் உண்டு. கடந்த 12.12.2014ம் தேதி தண்ணீர்பந்தலில் வெற்றிவேல் என்பவரிடம் குறைந்த விலையில் மதுபாட்டில் வாங்கினேன். வாங்கி சாப்பிட்ட பின்னர் மயக்கம் வருவது போல் இருந்தது. அடுத்தநாள் தனியார் மருத்துவமனைக்கு போனேன். அடுத்தநாள் செய்திதாளை பார்க்கும்போது போலி மதுபானம் விற்கபட்டது பற்றி தெரிந்துகொண்டேன். ரூ.65க்கு கிரின் லேபிள் என்ற பெயரில் உள்ள மதுபானத்தை வாங்கினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னுடைய ஊர்க்கும், தண்ணீர்பந்தலுக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 25 கி.மீட்டர் இருக்கும். அங்கு செல்ல சுமார் ஒரு மணிநேரமாகும். 12.12.2014ம் தேதி எத்தனை மணிக்கு போலிமதுபானம் வாங்கினேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மலிவான விலையில்

போலிமதுபானம் விற்றால் அதுகுறித்து காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்கவேண்டுமென்று எனக்கு தெரியும். மதுபானம் குடித்தபின்னர் எனக்கு வாந்தி வருவதுபோன்று, மயக்கம் வருவதுபோன்று இருந்தது. அதனால் தனியார் மருத்துவமனைக்கு போனேன். எந்த மருத்துவமனையில் என்ன சிகிச்சை பெற்றேன் என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை ஆய்வாளர் விசாரணையின் போது நான் கொடுக்கவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்னது போன்று வெற்றிவேலிடம் மதுபானம் வாங்கவில்லை என்றும், போலிசார் புள்ளி விவர கணக்கு வேண்டும் என்பதற்காக பதிவு செய்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.